வடாற்காடு மாவட்டத்திலுள்ள பெருவிளக்கப் பண்ணைகள்.

*வினா எண். 145— திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எடுத்துக்கொண்ட பெருவிளக்கப் பண்ணைகள் எத்தனை ?

(ஆ) இதற்காக செலவு செய்த தொகை யாது ?

(இ) இதனால் கிட்டிய பலன் என்ன ?

(ஈ) கனியம்பாடி பெருவிளக்கப் பண்ணையில் செய்த காரியங்கள், திட்டங்கள் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பத்து இடங்கள்.

(ஆ) ரூபாய் 9.486 இலட்சம்.

(இ) பலன்கள்—

(1) சம உயர வரப்பிடுதலால் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

(2) நில நிரவல் மூலம் மேடு பள்ளமுடைய நிலங்கள் சம மட்டமாக்கப்பட்டு நல்ல விளை நிலமாக்கப்படுகிறது.

(3) பூமிக்கடியில் குழாய் பதிப்பதால் மேடான நிலத்திற்கு நீரைக் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் நீர் சேதமாவது தடுக்கப்படுகிறது.

(4) வண்டல்மண் ஏரிமண் சேர்ப்பதால் நிலத்தின் வளம் அதிகமாக்கப்படுகிறது.

(5) ஓடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டுவதன் மூலம் மழை நீரைத் தேக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும் பயன்படுகிறது.

(ஈ) 502 ஏக்கரில் ரூபாய் 43,858 செலவில் சம உயர வரப்பிடப்பட்டது (Contour bunc ng).

1-10 ஏக்கரில் ரூபாய் 1,445 செலவில் நில நிரவல் செய்யப்பட்டது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் பெருவிளக்கப்பணியின் மூலம் 502 ஏக்கரில் 43 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதில் என்னென்ன வேலைகள் செய்யப்பட்டன? அந்த வேலைகளில் மேலும் ஏதாவது குறை இருக்கின்றதா? அந்த மாவட்டத்தில் சீர்திருத்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: புன்செய் சாகுபடி நிலங்களில் சம உயர வரப்புக்கள் அமைப்பது, ஓடை பராமரிப்புப் போன்ற பணிகளில், நீர் வசதியுள்ள சாகுபடி நிலங்களில் நிலங்களைச் சமப்படுத்துவது, வடிகால்களைத்தேவையான இடங்களில் வெட்டித்தருவது, பாசன நீர் வீணாகாமல் தடுப்பதற்கு, இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் புள்ளிவிவரங்கள் தற்போது இல்லை.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த திட்டத்தில் 502 ஏக்கர் நிலத்தை எடுத்ததில் கணியம்பாடி பகுதியில் சில திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அந்த அதிகார பூர்வமான வேலைகள், ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பணிகள் அனைத்தும் செய்யப்பட்டதா? மேலும் ஏதாவது வேலைகள் அந்தப் பகுதிகளில் குறை வைக்கப்பட்டிருக்கிறதா? அங்கே என்னென்ன திட்டங்கள் திட்டமிடப்பட்டன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதைத்தான் குறிப்பிட்டுக் கூறினேன். 502 ஏக்கரில் 43,858 ரூபாயில் சம உயர வரப்பிடப்பட்டது என்றும், 1,445 ரூபாயில் நில நிரவல் செய்யப்பட்டது. இன்னும் முடிக்கப்படாத பணி ஏதாவது இருந்தால் அதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருவிளக்கப்பணிகள் மூலம் பல இடங்களில் செய்ததாகச் சொன்னார்கள். அந்தப் பணிகள் தனியாருடைய நிலங்களிலும் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி செய்யப்பட்டிருந்தால் அதை மானியத்திலே செய்யப்பட்டதா அல்லது கடனிலே செய்து தரப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தனியார் நிலங்களுக்கும் செய்யப்படுகிறது. சமவெளிப்பகுதிகளில் 25 சதவீதமும் மலைப்பகுதிகளில் 40 சதவீதமும் மானியமாக அரசு அளிக்கிறது. மீதி உள்ள தொகையை பணி முடிந்து இரண்டு வருடங்கள் சென்றபின் 10 ஆண்டுகளிலே நில வரியோடு சேர்த்து, அவ்வப்போது அனுமதிக்கின்ற வட்டிவிகிதத்தில் வட்டியோடு சேர்த்து வசூலிக்கப்படும்.